புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# பழமொழி நானூறு கூறும் கற்றலும் கல்லாமையும்

**மு. புவனேஸ்வரி,**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
பதிவு எண் : 19213114022044,
தமிழ்த்துறை, தமிழாய்வுமையம்,
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம் – 629165.

**முனைவர் ச. கீதா,**
நெறியாளர், உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, தமிழாய்வுமையம்,
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம் – 629165.

**(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)**

**ஆய்வுச்சுருக்கம்:**

இளமைப் பருவமே கல்விக் கற்பதற்குரிய பருவமாகும். காலம் போன காலத்தில் கல்வி என்பது இயலாததாகும். இளமையிலே கற்கும் போது தான் அக்கருத்துகள் மனதில் ஆழமாகப் பதிந்து, பிந்தைய வாழ்க்கைக்குப் பயனுள்ளதாக அமையும். அதனால் தான் இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்று பெரியோர்கள் கூறுவார்கள். வெளிச்சத்தின் உதவியால் தான் அனைத்தையும் காண முடியும். அதற்காகவே, விளக்கு, திரி, எண்ணெய் போன்றவற்றை விலை கொடுத்து வாங்குகிறோம். அவை வெளிச்சம் தரவில்லையெனில் நாம் விலை கொடுத்து வாங்கியதும் வீணே. அதுபோல் படிக்கும் காலத்தில் நல்ல நூற்களை வாங்கி கற்க வேண்டும். பயன்தராத நூற்களை வாங்கி கற்பதால் பயன் ஏதும் ஏற்படுவதில்லை. நிரம்ப கல்வியறிவு பெற்றவர்கள் உலக நாடுகளையெல்லாம் தன் சொந்த நாடாகவே கருதுவர். அவர்களுக்குச் செல்லும் வழியில் உண்ண உணவு எடுத்துச் செல்ல வேண்டாம். ஏனெனில் அவர்களுக்கு அனைவருமே உறவினர் ஆவார்கள். கற்றறிந்த பெரியவர்களிடம் சென்று தங்களின் சந்தேகங்களைக் கேட்டுத் தீர்த்துக் கொள்ள வேண்டும்; அதுவே நன்மை பயக்கும். ஒருவரது குலத் தொழிலானது கருவிலே இயல்பாகவே தோன்றிவிடும் என்பதை நரைமுடித்து நீதி கூறிய கரிகாலன் கதையினாலே அறிய முடிகிறது. ஒரு சான்றோரின் சிறப்பினை, மற்றொரு சான்றோராலேயே அறிய முடியும். தன்னடக்கமே சான்றோரின் பேராயுதம். குறையறிவுடையோரே சலம்பிக் கொண்டிருப்பர்; நிறையறிவுடையோரோ தன்னடக்கத்துடனேயே இருப்பர். கற்றறிந்தவர்களைக் குறை கூறிக் கொண்டே இருப்பது மூடர்களின் செயலேயாகும். ஆகவே அதனை விடுத்து, புதியனவற்றைக் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். கற்று அறிவுத் தெளிவு பெற்றவர்களால் எவருக்கும் தீங்கு செய்ய முடியாது. கல்வியின் சிறப்புகள், கற்றவரின் சிறப்புகள், கல்லாமையால் ஏற்படும் தீமைகள் போன்றவை இக்கட்டுரையின் ஆய்வுப் பொருள்களாக அமைகின்றன.

**முன்னுரை**

பண்டைத் தமிழ் மக்களின் வாழ்வியல் முறைகளையும், பழக்கவழக்கங்களையும் வெளிப்படுத்துவனவாகவே தமிழ் இலக்கியங்கள் திகழ்கின்றன. சங்ககாலத்தில் இனக்குழுச் சமூகமாக வாழ்ந்த மக்கள் ஒரு முடியாட்சியின் கீழ் அடங்கியிருந்தனர். அக்காலத்தில் முடியுடை வேந்தர்களும், குறுநில மன்னர்களும் புலவர் பேணுநராகவும், அவர்களின் அறக் கருத்துகளை ஏற்றுப் போற்றுபவர்களாகவும் இருந்தனர். புலவர்களும், அரசர்களும் நண்பர்களாகத் திகழும் அளவிற்கு மிகச் சிறப்பான காலக்கட்டமாகத் திகழ்ந்த காலம் அது. வயதிலும், அனுபவத்திலும் மூத்தவர்களானாலும், மன்னர்களேயானாலும் தவறு செய்வது என்பது இயல்பானதாகும். அது தெரிந்து செய்வதாகவும் இருக்கலாம் அல்லது தெரியாமல் செய்வதாகவும் இருக்கலாம்.

அம்மன்னர்களுக்குத் தாங்கள் செய்வது தவறு என இடித்துரைக்கும் வல்லமை பெற்றவர்கள் புலவர்களே. புலவர்கள் தாங்கள் கூற வந்த செய்தியைச் செய்யுள் வடிவில் எடுத்துரைத்துப் பரிசில்களும் பெற்றனர். மக்கள் அறநெறியினின்று பிறழ்ந்து வாழ்ந்த இருண்ட காலமான சங்ககாலத்துப் பின் தோன்றியவையே பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாகும். இவை மக்களுக்கு அறநெறிகளைக் கற்பிப்பனவாக அமைந்திருந்தன. இந்நீதி நூற்களுள் ஒன்று பழமொழி நானூறு என்னும் நூலாகும். இதனை சமண சமயத்தைச் சார்ந்தவரான முன்றுறையரையனார் இயற்றியுள்ளார். சமண சமயம் வலியுறுத்தும் கள்ளாமை, கொல்லாமை, கல்வி, தானம், தர்மம் போன்ற பல்வேறு அறக் கருத்துகளைக் கொண்டே செய்யுள்களை அமைத்துள்ளார். அந்த வகையில் சமண சமய நெறியிலேயே கல்விக்கும் முக்கியத்துவம் தந்துள்ளார். பண்டைத் தமிழ்ச் சமுகத்தில் நிலவிய கல்விச் சார்ந்த கற்றலின் தேவைகள், கல்லாமையின் விளைவுகள் போன்றவை பழமொழி நானூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையையும், கல்வியைப் பெற்றுக் கொள்வதன் அவசியத்தையும் இக்கட்டுரையில் காணலாம்.

**கல்வியின் சிறப்புகள்**

இளமைப் பருவமே கல்வி கற்பதற்குரிய பருவமாகும். ஒருவன் இளமையில் கல்வி கற்காமல், பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டுவிட்டால் கல்வியைப் பெறாமலேயே போய் விடுகின்ற சூழல் ஏற்பட்டு விடும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்றொரு பழமொழியைக் கிராமப்புற பெரியவர்கள் கூறுவார்கள். இது பிள்ளைகளைச் சிறுவயதில் அடக்கி வளர்த்தாத பெற்றோருக்கும், சிறுவயதில் கல்வி கற்காத மனிதர்களுக்கும் பொருந்தும். அதுபோல் சுங்கச் சாவடியில் வருகின்ற அனைத்து வண்டிகளையும் போகவிட்டுவிட்டு பிறகு வரிவசூல் செய்து கொள்ளலாம் என நினைத்தால் வரிவசூல் செய்ய முடியாது. மேலும், பரிசில் ஓட்டும் ஓடக்காரன், பரிசலில் பயணிகளை ஏற்றிக் கொண்டு கரை சேர்ந்த பின் பண்ம் பெற்றுக் கொள்ளலாம் என்றால் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. காலத்தே பயிர் செய்தால் மட்டுமே விளைச்சலை அனுபவிக்க முடியும். கல்வி கற்பதற்கென குறிக்கப்பட்ட இளமைப் பருவத்திலேயே கல்வியைக் கற்றுவிட வேண்டும் என்னும் கருத்தைச் சமூகத்திற்கு எடுத்துரைப்பதில் பழமொழி நானூறு முன்னிலை வகிக்கிறது. இதனை,

''ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
போற்றும் எனவும் புணருமோ – ஆற்றச்
சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லையே, இல்லை
மரம்போக்கிக் கூலி கொண்டார்'' (பழ.மொ.நா. 2)

என்ற பாடல் புலப்படுத்துகின்றது. மேலும், விளக்கின் ஒளியைக் கொண்டு நாம் அனைத்தையும் தெளிவாகக் காண முடியும். விளக்குச் சுடர்விட்டு எரிவதற்காகவே எண்ணெய், விளக்குத்திரி, விளக்குப் போன்றவற்றை விலை கொடுத்து வாங்குகிறோம். அப்படி விலை கொடுத்து வாங்கி ஏற்றிய விளக்கு ஒளி தரவில்லையெனில் நாம் பணம் கொடுத்து வாங்கிய பொருள்கள் எல்லாம் வீணேயாகும். அதுபோல் படிக்கும் காலத்தில் நல்ல நூற்களை வாங்கி கற்க வேண்டும். பயன்தராத நூற்களை வாங்கி கற்பதால் பயன் ஏதும் கிடைக்கப்போவதில்லை. எவரும் இருட்டை விலை கொடுத்து வாங்க ஆசைப்படமாட்டார்கள். காலத்தையும், உழைப்பையும், பொருளையும் கொடுத்துப் பெற்ற கல்வி கற்றவருக்குப் பயன் தருவனவாக இருக்க வேண்டும். கல்வியானது கற்றவருக்குப் பயனளிக்கவில்லை என்றால் கற்றதும் வீணேயாகும். பொருளுணர்ந்து, விரும்பி கற்கும் கல்வியானது நமக்கும், பிறருக்கும் பயன்படும் வகையில் அமைய வேண்டும் என்பதனை, ''பொருள் கொடுத்துக் கொள்ளார் இருள்'' என்னும் பழமொழி வழி வலியுறுத்துகிறார் அரையனார். இளமையிலேயே கற்க வேண்டிய அனைத்தையும் கற்றுவிட வேண்டும். ஒருவருக்குக் கண் எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு கல்வியும் முக்கியம் என்பதைப் பின்வரும் இலக்கியங்கள் விவரிக்கின்றன.

''கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'' (வெற்றிவேற்கை 35)
''இளமையில் கல்'' (ஆத்திச்சூடி 29)
''எண்ணும் எழுத்தும் கண்எனத் தகும்'' (கொன்றைவேந்தன் 7)

கூந்தலை அழகுப்படுத்துவதும், வளையும் படியான கரையினைக் கொண்ட ஆடையினை உடுத்துவதும், மஞ்சள் முதலிய அழகுப் பொருட்களை முகத்தில் பூசிக் கொள்வதும் மட்டுமே

*அழகாகாது. உண்மையான அழகு என்பது மனதினால் யாருக்கும் தீங்கிழைக்காமல், நாம் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நடுநிலை தவறாது வாழ வேண்டும் என்கிற உணர்வைத் தரும் கல்வியினால் ஏற்படுகின்ற அழகே அழகாகும் எனக் கல்வியின் அழகு பற்றி, புறநானூறு பாடல் பின்வருமாறு விளக்குகிறது.*

*"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்*
*மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து*
*நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்*
*கல்வி அழகே அழகு"* *(நாலடியார் 131)*

*முழுமையாக நோக்கினால், வறுமையில் வாடினாலும் கற்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும். இளமையிலேயே கற்க வேண்டும். எண்ணும், எழுத்தும் தான் மிக முக்கியம், கல்வி மட்டுமே அழகு என்பதும் புலப்படுகிறது.*

**கற்றவரின் சிறப்பு**

*மிகுதியான நூற்களைக் கற்றறிந்தோர் அறிவில் சிறந்தோர் ஆவார் என்பதிலிருந்து கல்விக்கும் அறிவிற்குமான தொடர்பின் முக்கியத்துவத்தை அறிய முடிகிறது. கற்றவர்களது புகழ் எல்லா நாடுகளிலும் பரவியிருக்கும். அவர்களுக்குச் செல்லும் வழியில் உண்ண உணவு எடுத்துச் செல்ல வேண்டாம். ஏனெனில் அவர்களுக்கு அனைவருமே உறவினர் , அவர்கள் அனைவராலும் வரவேற்று உபசரிக்கபடுவார்கள். இக்கருத்தினை நாம் சிந்தித்துப் பார்ப்போமேயானால் கல்வியறிவு பெற்றவர்கள் அறிவிற் சிறந்தவர்கள் என்னும் கருத்தியல் போக்கில் மாற்றம் ஏற்படுகிறது. குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டுதல் என்ற நிலையிலிருந்து விடுபட்டு உலகைத் தன் சொந்த நாடாகவே கருதும் பரந்த நிலைக்கு அழைத்துச் செல்கிறது. ஒரு தனிமனிதன் பெறும் கல்வி சமூகத்தில் எவ்வித மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதை உற்றுநோக்கினால் அது இன்றைய கல்வி முறைக்குப் பொருந்துவனவாகவே அமைந்துள்ளது.*

*"ஆற்றவும் கற்றார் அறிவுடையார், அஃது உடையார்*
*நாற்றிசையும் செல்லாத நாடில்லை – அந்நாடு*
*வேற்று நாடாகா, தம்வேயாம்! ஆயினால்*
*ஆற்றுணா வேண்டுவது இல்"* *(பழ.மொ.நா.5)*

*தானே கற்றுத் தெளிதல் என்பது இயலாத காரியம். எனவே கற்றறிந்த பெரியோர்களிடம் தன் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு பெறுவதே சிறப்புடையதாகும். தன்னைத் தானே பாடங்களைக் கற்றறிந்து கொள்வதை விடவும், ஆசிரியர்களிடம் சந்தேகங்களைக் கேட்டு விளக்கம் பெறுவதே மிகவும் ஏற்புடையதாகும். கிணற்றுக்குள்ளே வாழும் தவளையானது, தான் வாழும் கிணறே உலகம் என நினைத்து வாழுமாம். ஏனெனில் அதற்கு வெளி உலகம் தெரியாது. எனவே தானே கற்றுத் தெளிந்த கிணற்றுத் தவளையாக இராமல், நன்கு கற்றறிந்த பெரியவர்களிடம் சென்று தங்களின் சந்தேகங்களைக் கேட்டுக் கேள்வி ஞானம் பெறுவதே நன்மை பயக்கும். இதனை, பழமொழி நானூறு "கற்றலின் கேட்டலே நன்று" என்கிறது. இங்கு முன்றுறையரையனாரின் கல்விச் சிந்தனையானது நம்முடைய கல்வி முறைக்கு ஏற்ற முற்போக்குச் சிந்தனையாகவே அமைந்துள்ளதைக் காணலாம்.*

*வயதில் சிறியவனால் சரியான தீர்ப்பினை வழங்க முடியாது எனக் கருதி வழக்கினைக் கூற மறுத்தவர்களை மறுநாள் அவைக்கு வரச் சொல்லிவிட்டு, தான் முதியவர் வேடமணிந்து அரசவைக்கு வந்து நல்ல தீர்ப்பினை வழங்கினான் சோழ அரசன் கரிகாலன். பின்னர் தன்னுடைய முதியவர் வேடத்தைக் கலைத்து வயதில் இளையவர் அறிவுடையவராய் இருக்க மாட்டார் என்றெண்ணுவது தவறு என அவைக்கு எடுத்துக் கூறினான். இவ்வரலாற்று நிகழ்வானது குலத்தொழிலானது கற்காமல் கருவினிலேயே உருவாகிவிடும் என்பதற்குச் சிறந்த சான்றாக அமைகிறது.*

*"உரைமுடிவு காணான் இளையோன் என்ற*
*நரைமுது மக்கள் உவப்ப – நரைமுடித்துச்*
*சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை*
*கல்லாமல் பாகம் படும்"* *(பழ.மொ.நா.7)*

*கற்றறிந்த சான்றோரால் மட்டுமே, அறிவுமிக்க மற்றொரு சான்றோரின் கருத்தைப் புரிந்து கொள்ள முடியும். வேறு எவராலும் புரிந்து கொள்ள இயலாது.*

*"புலம் மிக்கவரைப் புலமை தெரிதல்*
*புலம் மிக்கவர்க்கே புலனாம் – நலமிக்க*
*பூம்புனல் ஊர பொதுமக்கட்கு ஆகாதே*
*பாம்பறியும் பாம்பின கால்"* *(பழ.மொ.நா. 8)*

*கற்றவரது சிறப்பைக் கற்றவரே காமுறுவர் என்கிறது மூதுரை. முன்னர் சென்ற எறும்பின் வழியைப் பின்பற்றியே பின்னர் வரும் எறும்புகளும் செல்லும். அதுபோலவே, ஒரு பாம்பு ஊர்ந்து சென்ற வழியினை மற்றொரு பாம்பினாலேயே அறிய முடியும். நல்லறிவுடையவர்களின் பெருமை, அறிவுத்திறன் போன்றவற்றை அறிய வேண்டுமானால், அவரை விட அறிவில் சிறந்த மற்றொருவராலேயே முடியும். இரும்பையோ, வைரத்தையோ பிளக்க வேண்டுமானால், மற்றொரு கூரான இரும்பையோ அல்லது வைரத்தையோ கொண்டுதான் பிளக்க முடியும். "அயிலாலே போழ்ப அயில்" என்னும் பழமொழி கல்வியறிவின் முக்கியத்துவத்தை இன்றைய மாணவர்களுக்கு எடுத்துரைப்பதாகவே அமைந்துள்ளது. ஒருவன் எந்தக் குடியில் பிறந்தவனாக இருந்தாலும் கற்றறிந்தவனாக இருந்தால் அவனை அனைவரும் விரும்புவர். இதனை வெற்றிவேற்கை என்னும் நூலில் அதிவீரராம பாண்டியர் பின்வருமாறு கூறுகிறார்.*

*"அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்"* *(வெற்றிவேற்கை 39)*

*இன்னும் சிறப்பாக வள்ளுவர், ஒருவன் தான் கற்றதன் பயனே, தன்னை விட அதிகம் கற்றவரைப் போற்றுவதேயாகும் என்கிறார். கல்வி கற்ற அறிவுடையவர், மற்றொரு கல்வி கற்றவரின் உள்ளத்தில் சிறப்பாக ஒரு கண் இருப்பதை உணர்வர். அக்கல்வி கற்றவர் ஆராய்ந்து சொல்பவை, பாலை நிலத்திலே கயல் மீனைப் பிறழச் செய்தாற்போல நன்மையை உருவாக்கும். அதாவது ஒரு நாடானது வளமையில் குன்றிக் காணப்பட்டாலும், அங்கு கற்றறிந்தவர்கள் வாழுவார்களேயானால் அவர்களால் அந்நாட்டை மிகச் சிறந்த நாடாக மாற்ற முடியும் என்கிறார் திருமூலர்.*

*"கற்றறி வாளர் கருதிய காலத்து*
*கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு*
*கற்றறி வாளர் கருதி உரைசெயும்*
*கற்றறி காட்டக் கயலுள ஆக்குமே"* *(திருமந்திரம் 291)*

*கல்வியறிவில் சிறந்த பெரியோர் எப்பொழுதும் தன்னடக்கத்துடனேயே இருப்பர். ஆனால் கல்வியறிவற்றவர்கள் தனக்குத் தெரிந்த சொற்ப செய்திகளைக் கொண்டு, தனக்கு எல்லாம் தெரியும் என்று தன்னைத் தானே புகழ்ந்து கொண்டு திரிவர். ஒரு குடம் நிறைய தண்ணீர் இருந்தால் அக்குடம் தளும்புவதில்லை; மாறாக, குறைகுடமாயின் தளும்பிக் கொண்டே இருக்கும். இதனை, "நிறைகுடம் நீர் தளும்பல் இல்" என்கிறார் பழமொழி நானூறு நூலாசிரியர். கற்க வேண்டிய நூல்களைக் கற்றறிந்து தெளிவடைந்தவர்கள் கண்ட அடக்கமே உண்மையான அடக்கமாகும். கல்லாதவர்களோ தங்களுடைய அறியாமையை மறந்து, தங்களைத் தாங்களே புகழ்ந்து வீண் பெருமை பேசிக் கொண்டிருப்பார்கள். நிறைகுடத்திலுள்ள நீர் தளும்பாததுபோல கற்றவர்கள் வெறுமனே வீண் பெருமை பேசித்திரிய மாட்டார்கள். மொத்தத்தில் கற்றவர்கள் புகழ் மிக்கவர்களாயும், கிணற்றுத் தவளையாக இராமல் தன்னை விட கற்றறிந்தவர்களிடம் சந்தேகங்களைக் கேட்டுத் தெளியும் தன்மையுடையவர்களாயும், கற்றவர்களை மதித்தும், தன்னடக்கத்துடனேயே இருப்பார்கள் என்பது தெளிவு.*

**கல்லாமையால் ஏற்படும் தீமைகள்**

*கல்வியறிவில்லாத ஒருவன், தான் வாய்மொழியாக கேட்டறிந்த செய்திகளை அடிப்படையாகக் கொண்டு கற்றறிந்தோர் கூடியுள்ள அவையில் பேச முற்படுவானாகில் முதலில் அவனுக்கு வார்த்தைத் தடுமாற்றம் ஏற்படும். ஆகவே ஒரு செயலைச் செய்வதற்கு முன் மனதில் சிந்தித்துச் செயல்படும் பழக்கம் வேண்டும். அப்பொழுதுதான் அச்செயலில் வெற்றி பெற முடியும். ஒரு வினா எழுந்தால் தான் அதற்கான விடை கிடைக்கும். கல்வியறிவு பெற்றிருந்தாலும் வாழ்வில் வெற்றியடைய பட்டறிவும் இருத்தல் மிகவும் அவசியமாகும். கல்வியில்லாதவர்கள், தான் அறிந்த செய்தியை மற்றவர்களுக்கு விளக்கிக் கூற இயலாதவர்களாய் இருப்பர். இதுபோல், தன் பகைவரைப் பணிய வைக்க இயலாத போது, அப்பகைவனோடு போரிட்டு வெற்றி பெறும் ஆற்றலும், வலிமையும் உடையவனாக இருந்தாலும், போரிடும் வழிமுறைகளைத் தன் வீரர்களுக்கு எடுத்துரைக்கும் திறன் இல்லாதவனால் வெற்றி பெற இயலாது. மாறாக,*

*தோல்வியே அடைவர். உறவினர்கள் இல்லாத ஒருவன் ஒரு நகரில் தனித்து வாழ்வானாகில் அந்நகரமும் அவனுக்குக் காடு போலவே இருக்கும். பல நூற்களைக் கற்றறிந்த அறிவுடைய ஒருவர், கல்லாதோர் கூடியிருக்கின்ற இடத்தில் , தனக்குத் தெரிந்த கருத்துகளைக் கூறுவார்களேயானால் அவர்களால் ஒன்றும் புரிந்து கொள்ள இயலாது. கற்றவரது நேரமும், பேச்சும் மட்டுமே வீணாகும். அதனால் யாருக்கும் பயன் ஒன்றும் கிடைக்கப்போவதில்லை. கல்லாதவர்களையே அரையனார் ஒழுக்கமற்றவர்கள் என்கிறார்.*

*கற்காதவர்களிடம் நல்ல செய்தியைக் கூறுவதும் தவறு, அதுபோல் நாம் கற்றறிந்த ஒழுக்கத்துடன் வாழும் போது புகழானது நம் வாழ்வைத் தேடி வரும் என்பதே உண்மையாகும். இதனை, முன்றுறையரையனார் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.*

*"கல்லாதவர் இடைக் கட்டுரையின் மிக்கதோர்*
*பொல்லாதது இல்லை ஒருவற்கு – நல்லாய்*
*இழுக்கத்தின் மிக்க இழிவில்லை! இல்லை*
*ஒழுக்கத்தின் மிக்க உயர்வு" (பழ.மொ.நா. 16)*

*தனக்குத் துன்பம் வராமல் தன்னை ஒருவன் காத்துக் கொள்ள விரும்பினால், அவன் கோபம் என்னும் கொடிய அரக்கன் தன்னுள் புகாதவாறு காத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் அக்கொடிய சினமே அவனை அழித்துவிடும். திருவள்ளுவரும் கூட சினத்தைக் காக்க வேண்டும் என்கிறார்.*

*"தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்*
*தன்னையே கொல்லும் சினம் (குறள் – 305)*

*கற்க வேண்டிய எல்லா நூற்களையும் முறையாகக் கற்று, கற்றறிந்த முறைப்படி வாழும் பெரியோர்களை எப்பொழுதும் குறை கூறிக் கொண்டே திரியும் கல்வியறிவில்லாத மூடர்கள் கோபம் கொள்வது எதைப் போன்று உள்ளது எனில், தன் கால்களால் இயல்பாக நடக்க முடியாத ஒருவன் , தன் கைகளில் ஊன்றுகோலை ஏந்திக் கொண்டு யானையுடன் விளையாட முயல்வதைப் போன்றதாகும். இதனை, "முடவன் பிடிப்பூனி யானையோடு ஆடல் உறவு" என்கிறார் முன்றுறையரையனார். இதிலிருந்து கல்வியறிவிற்கும், நற்குணங்களுக்குமான உறவு வெளிப்படுகிறது. கல்வி பெற்றாலே நற்குணங்கள் தானாகவே வந்து விடும் என்பதும், கோபம் என்ற மூர்க்கன் அழிக்கப்பட்டு விடுவான் என்பதும் புலனாகிறது. நல்ல நூற்களைக் கற்கும் வாய்ப்பு கிடைக்காதவர்கள் கற்றறிந்தவர்களிடம் கேட்டறிய வேண்டும். ஏனெனில் அவனது வாழ்வில் தளர்ச்சி ஏற்படும் போது அக்கருத்துகள் அவனுக்கு ஊன்றுகோல் போல உடனிருந்து பயன்தரும் என்கிறார் திருவள்ளுவர்.*

*"கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்கு*
*ஒற்கத்தின் ஊற்றாம் துணை" (குறள் 414)*

*அறிவால் சிறந்த பெரியோற்களிடம் உரையாடும் போதெல்லாம், கற்காதவர்கள் தங்கள் உரையாடலில் ஏற்படும் தடுமாற்றம், தளர்ச்சி ஆகியவற்றை எண்ணிச் சோர்வடையாமலும், மனந்தளராமலும் இருக்க வேண்டும். ஒவ்வொரு சூழலிலும் தாங்கள் பெற்றுக் கொள்ளும் அவமானங்களை அனுபவமாகக் கொண்டு கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். இவ்வாறு புதியனவற்றைக் கற்றுத் தெளியும் போதுதான் அதுவரைக்கும் தான் கற்காதிருந்ததும், அறிவுத்தெளிவு இல்லாதிருந்ததும் தெரிய வரும். நிலத்தைத் தோண்ட தோண்ட நீரானது ஊறிக் கொண்டே இருப்பது போல, நூற்கள் பலவற்றைக் கற்க கற்க அறிவு வளர்ந்து கொண்டே இருக்கும் என்பது ஆன்றோர் வாக்கு.*

*"சொற்றொறும் சோர்வு படுதலால் சோர்வின்றிக்*
*கற்றொறும் கல்லாதேன் என்று வாழிஇரங்கி*
*உற்றொன்று சிந்தித்து உழன்றுஒன்று அறியுமேல்*
*கற்றொறும் கல்லாத வாறு" (பழ.மொ.நா. 3)*

*ஒவ்வொரு நாளும் அறிவுதரும் நூற்களைக் கற்க வேண்டும் என்கிறார் உலகநாதர். வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். கற்காமல் ஒருநாள் கூட இருக்கக் கூடாது என்கிறார் உலகநாதர்.*

*"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" (உலகநீதி-1,வரி-1)*

ஒவ்வொரு நாளும் புதிய புதிய கருத்துகளைக் கற்கும் போது நாளுக்கு நாள் அறிவும் வளர்ச்சி பெற்று புத்துணர்வுடன் இருக்கும். நாமறிந்த செய்திகளைப் பிறருக்கும் கொடுத்து இன்பமுற வாழமுடியும்.

**தொகுப்புரை**

ஒருவர் சேர்த்து வைத்த பொருள், நம்முடைய உயிர் உட்பட அனைத்தும் அழிந்து போகும். ஆனால் ஒருவன் கற்றக் கல்வி மட்டும் ஒருநாளும் அழியாது. இதிலிருந்து ஏனைய செல்வங்களை விடவும் கல்விச் செல்வமே சிறந்தது என்பதும், அழகுக்கெல்லாம் தலையாய அழகு கல்வியே என்பதும் வெளிப்படுகிறது. பழமொழி நானூறு என்னும் நூல் மக்களின் பட்டறிவுகளை அதாவது அனுபவங்களை ஒவ்வொரு பாடலிலும் எடுத்துரைக்கிறது. அதிலும் கல்வியின் சிறப்புகள், கற்றவரின் சிறப்புகள் , கல்லாமையால் ஏற்படும் தீமைகள் ஆகியவற்றைப் பற்றியும் மிகச் சிறப்பாக விளக்குகிறது. இவற்றை நோக்கும் போது எக்காலத்திலும் கல்வியறிவு பெற்றவருக்கே உரிய மதிப்புகள் கிடைக்கின்றன. நல்ல சிந்தனைகள் உடையவராகவே இருந்தாலும் கல்வியறிவு இல்லையேல், அவர்களுக்கு இச்சமூகத்தில் மதிப்புக் குறைவதனையும் காண முடிகிறது. நல்ல நூற்களைக் கற்றுத் தெளிந்தவர்கள் தீமை தரும் செயல்களைச் செய்ய முன்வரமாட்டார்கள்; நன்னெறியிலிருந்தும் வழுவி நடக்க மாட்டார்கள் என்பதே இன்றுவரை தமிழர்களின் பொதுவான கருத்தாகும். பழமொழி நானூற்றில் இடம்பெற்றுள்ள நானூறு பாடல்களிலும் ஒவ்வொரு பாட்லின் இறுதியிலும் ஒரு பழமொழியை, மக்களின் வழக்கத்திலிருந்து பெற்றுச் சுருக்கமான வடிவில் தொகுத்துத் தந்துள்ளமை முன்றுறையரையனார் தமிழுக்கும், தமிழர்களுக்கும் செய்த மிகப் பெரிய தொண்டாகும்.

**துணைநூற் பட்டியல்**


1. ஞா. மாணிக்கவாசகன் — பழமொழி நானூறு – விளக்கஉரை, முதல் பதிப்பு – டிசம்பர் 2001, உமா பதிப்பகம் , சென்னை -5.

2. செல்லத்துரை முரளிதரன் — நீதி நூற்கள் ஏழு, முதல் பதிப்பு – ஜுன் 2001, அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்,

3. எஸ். கௌமாரீஸ்வரி — பதினெண் கீழ்க்கணக்கு நூற்கள், முதல் பதிப்பு – 2009, சாரதா பதிப்பகம், ஜி. 4, சாந்தி அடுக்ககம் சென்னை – 14

4. ஞா. மாணிக்கவாசகன் — திருமூலர் திருமந்திரம் மூலமும் – விளக்க உரையும், இறுதி பதிப்பு – டிசம்பர் 2022, உமா பதிப்பகம் , சென்னை -5


********* ********* ********** ********* ********* ********** ********* **********